செ.வெ.எண்.935/2017 நாள்:09.12.2017

# சேலம் மாவட்டத்தில் இயங்கும் 373 பொது சேவை மையங்களிலும் பொதுமக்களுக்கு விரைவான சேவைகளை வழங்கிட நடவடிக்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரோஹிணி ரா.பாஜிபாகரே, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

சேலம் மாவட்டத்தில் இ–சேவை மையம் மூலம் தமிழக அரசால் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரோஹிணி ரா.பாஜிபாகரே, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார். இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

சேலம் மாவட்டத்தில், மின் ஆளுமைதிட்டம் 12.12.2014 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் 373 பொது சேவை மையங்கள் பல நிறுவனங்களில் வழியாக இயங்கி வருகின்றன. தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக 202 பொது சேவை மையங்களும், மாவட்ட புதுவாழ்வு திட்டங்கள் மூலமாக 150 பொது சேவை மையங்களும், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் மூலமாக 21 பொது சேவை மையங்களும் செயல்பட்டு வருகின்றன.

இந்த 373 பொது சேவை மையங்கள் பற்றிய முகவரி மற்றும் தொலைபேசி எண் ஆகிய விவரங்களை www.salem.nic.in என்ற வலைதள மூலம் வட்ட வாரியாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இத்திட்டத்தின் மூலம் சாதிசான்றுகள், இருப்பிடச் சான்றுகள், முதல்பட்டதாரி சான்றுகள், ஆதரவற்ற விதவைச் சான்றுகள் மற்றும், வருமானசான்றுகள் வருவாய்த்துறை சம்பந்தமான 5 வகையான சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த சான்றுகளைப் பெற பொதுமக்கள், இதற்கென செயல்படும் பொது சேவை மையங்களில் உரிய ஆவணங்களை இணைத்து விண்ணப்பங்களை சமர்ப்பித்தால், அந்த விண்ணப்பங்கள் கணினியில் பதிவு செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு இணையதளம் வாயிலாக சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. சேவை கட்டணமாக ரூ.60 ஐ பொது சேவை மையங்களிலேயே செலுத்தி பொதுமக்கள் பயன்பெறலாம்.

மேலும், சமூகநலத்துறை சார்பாக 6 வகையான திருமண உதவித் திட்டங்களுக்கான விண்ணப்பங்கள் இச்சேவை மையம் மூலமாக பெறப்பட்டு உதவித் தொகைகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மூவலூர் ராமமிர்தம், முத்துலட்சுமி ரெட்டி கலப்பு திருமணம், இ.வி.ஆர்.மணியம்மையார் திருமண உதவித் திட்டம், அன்னை தெரசா அம்மையார் அனாதை பெண் திருமண உதவிதிட்டம், இ.வி.ஆர்.மெய்யனூர் விதவை பெண்

திருமணஉதவித் திட்டம், தர்மாம்பாள்அம்மையார் நினைவு விதவை மறு திருமணஉதவித் திட்டம், இரண்டுபெண்குழந்தைத் திட்டமும் என சமூகநலத்துறைக்கு சம்பந்தமான சேவைகளுக்கு ரூ.120 ம் பொது சேவை மையங்களிலேயே சேவை கட்டணமாக செலுத்தி பயன்பெறலாம்.

தற்போது சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் பட்டா மாறுதல் மற்றும் உட்பிரிவு செய்து தனிபட்டா கோரும் பணிகள் இணையதளம் மூலம் மேற்கொள்ளும் திட்டம் கடந்த 21.01.2016 முதல் சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் தொடங்கப்பட்டுள்ளது. இதனை பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் தங்களது நிலத்திற்கான பட்டா மாறுதல், மனுக்களை அந்தந்த பகுதிகளில் உள்ள பொது சேவை மையம் மூலம் பட்டா மாறுதல் மனுக்களை அளித்து அதற்கான கட்டணம் ரூ.60 செலுத்தி பட்டா மாறுதலை இணையவழி மூலம் செய்து பயன் பெறலாம். மேலும் நில உரிமை விவரங்களை அச்சிடுவதற்கு ரூ.25 ஐ பொது சேவை மையங்களிலேயே சேவை கட்டணமாக செலுத்தி பயன் பெறலாம்.

மேலும் காவல்துறை தொடர்பான சேவைகளில் தொலைந்து போன ஆவண அறிக்கைக்கு ரூ.15 ம், புகார் பதிவு செய்தலுக்கு ரூ.25 ம், இணைய வழி புகாரின் நிலைக்கு ரூ.15 ம், முதல் தகவல் அறிக்கை நிலைக்கு ரூ.15 ம், சமுதாய பதிவேடு நிலைக்கு ரூ.15 ம், வாகனங்களின் நிலைக்கு ரூ.15 ம் பொது சேவை மையங்களிலேயே சேவை கட்டணமாக செலுத்தி பயன் பெறலாம். சுகாதார துறை தொடர்பாக தாய் சேய் இறப்பு விகிதாசாரம் மற்றும் கர்ப்பிணி பெண்கள் உடல்நிலை கண்காணிப்பு மேற்கொள்ளுதலுக்காக இலவசமாக பொது சேவை மையம் மூலம் முன் பதிவுகள் செய்யப்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் பிறப்பு சான்று பெறுவதற்கு PICME Registration கட்டாயம் ஆக்கப்படவுள்ளது. எனவே மேற்கண்ட சேவைகளைப் பெற ஏதேனும் ஒரு இ—சேவை மையத்தை அணுகி பயன்பெறுவதற்கு ஏதுவாக சேலம் மாவட்டத்தில் இயங்கும் 373 பொது சேவை மையங்களிளும் பொதுமக்களுக்கு விரைவான சேவைகளை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரோஹிணி ரா.பாஜிபாகரே இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம்.